


# அன்னக்கூட திருப்பாவாடை மஹோத்ஸவப் பத்திரிகை

**ஞாயிற்றுக்கிழமை, 07.03.2021**

ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் வேதாந்த தேசிகர் கைங்கர்ய ட்ரஸ்ட்

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# அன்னக்கூட திருப்பாவாடை மஹோத்ஸவப் பத்திரிகை

## ஞாயிற்றுக்கிழமை, 07.03.2021

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.
(பெருமாள் திருமொழி 4 – 9)

அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும்
தயிர்வாவியும் நெய்யளரும் அடங்கப்
பொட்டத்துற்றி * மாரிப்பகை புணர்த்த
பொருமாகடல் வண்ணன் பொறுத்தமலை *
வட்டத்தடங்கண் மடமான் கன்றினை
வலைவாய்ப் பற்றிக்கொண்டு * குறமகளிர்
கொட்டைத்தலைப்பால் கொடுத்து வளர்க்கும்
கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையே.
(பெரியாழ்வார் திருமொழி 3 – 5 – 1)

*ச்ரிய: பதியான எம்பெருமான் அவாப்தஸமஸ்தகாமனாய் ஆச்ரிதோஜ்ஜீவநார்த்தம் அர்ச்சாரூபியாய் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். அவற்றில் விசேஷமானதும், அகஸ்த்யஸேவித தேசமுமான நம் தமிழ்நாட்டின் ராஜதானியாய் விளங்கும் சென்னையிலே பேயாழ்வார் அவதார ஸ்தலமாக விளங்கும் ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலையில் தீநாலம்பந திவ்ய தம்பதிகளாய் "அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறை மார்பனாய் ", ஸ்ரீஸ்ரீநிவாஸனாய், "திருக்கண்டேன் " என்று தொடங்கி "தேனமரும் பூமேல் திரு" என்று தமிழிலே ஸ்பஷ்டமாக முதன்முதலே காட்டியருளிய தமிழ்த்தலைவன் பேயாழ்வாரும், சந்தமிகு தமிழ் மறையோன் வேதாந்தவாரியனும் கண்டுகளித்துப் பல்லாண்டு பாட எழுந்தருளியிருக்கிறான்.*

*இப்படி நாம் பெற்ற நன்மையாய் அலர்மேல் மங்கையுறை மார்பனும், நம் ஆசார்ய வள்ளலும் ஒருங்கே ஸேவைஸாதித்தருளும் **மாமயிலை ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸந்நிதியில்,** நிகழும் சார்வரி வருஷம் **மாசி மாதம் 23ம் தேதி (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை, மூல நக்ஷத்ரம்** கூடிய சுபதினத்தில் மாமயிலை திவ்ய தம்பதிகளான ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார், ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள் மற்றும் நம் ஆசார்ய வள்ளல் ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்கு **அன்னகூட திருப்பாவாடை மஹோத்ஸவம்** நடைபெற உள்ளது.*

*07.03.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று பெருமாள், தாயார், ஸ்வாமி தேசிகன் உத்ஸவர்களுக்கு விசேஷ திருமஞ்ஜனமும் அதைத் தொடர்ந்து அன்னகூட திருப்பாவாடை உத்ஸவமும் நடைபெறுகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் மேற்படி உத்ஸவத்தில் அந்வயித்து ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள், அலர்மேல் மங்கைத் தாயார், நிகமாந்த மஹாதேசிகன் அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கப் படுகிறார்கள்.*

### உத்ஸவ விவரம்

*ஞாயிற்றுக்கிழமை 07.03.2021*

| | |
|---|---|
| *காலை 08.00 மணி* | பெருமாள், தாயார், ஸ்வாமி தேசிகன் உத்ஸவர் நவகலச விசேஷ திருமஞ்ஜனம் |
| *காலை 11.30 மணி* | திருப்பாவாடை ஸமர்ப்பித்தல், தீர்த்தம், ஸ்ரீசடாரி, ப்ரஸாத விநியோகம் |
| *மாலை 06.30 மணி* | பெருமாள், ஸ்வாமி தேசிகன் விசேஷ திருவீதி புறப்பாடு |
| *மாலை 07.30 மணி* | பெருமாள், தாயார், ஸ்வாமி தேசிகன் பத்தி உலாத்தல் |


**இங்ஙனம்** ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் வேதாந்த தேசிகர் கைங்கர்ய ட்ரஸ்ட் அங்கத்தினர்கள்

மேலும் விவரங்களுக்கு *(SSPVD Kainkarya Trust)* : 98840 81711, 94440 19270, 94450 34576

ஸ்ரீ:



ஸ்ரீ பேயாழ்வார்



ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்